கள்ளக்குறிச்சி மாவட்ட மு...

பிறப்பிப்பவர்: திரு.க.முனுசாமி., எம்.எஸ்.ஸி.,எம்.ஏ.,பி.எட்.,எம்.பில்.,எம்.பி.ஏ.

ந.க.எண்.2075/அ1/2021 நாள். 09 .07.2021

பொருள்: பள்ளிக்கல்வி – கருணை அடிப்படையில் நியமனம் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியர் திரு.கே.ரவி என்பவரின் வாரிசுதாரர் திருமதி.ர.குணவதி என்பவருக்கு 04.08.2016 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடல் -- சார்பாக.

பார்வை:
1. கள்ளக்குறிச்சி. மாவட்டக் கல்வி அலுவலரின் ந.க.எண்.2976/அ1/2014. நாள்.03.08.2016.
2. அரசாணை (நிலை) எண். 48/தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)துறை நாள். 26.02.2021,
3. பள்ளிக்கல்வி இயக்குநரின் ந.க.எண். 21925/ஜே/இ4/2021, நாள். 09.04.2021.

********

பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டப்படி கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் ஒன்றியம், பிரிவிடையாம்பட்டு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்து பணிக்காலத்தில் 16.10.2009 அன்று காலமான திரு.கே.ரவி என்பவரின் மகளும், வாரிசுமான திருமதி.ர.குணவதி என்பவர் பார்வை 1ல் காணும் செயல்முறைகளின்படி இளநிலை உதவியாளராக 04.08.2016 முற்பகல் முதல் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் பள்ளிக் கல்வித்துறையில் கள்ளக்குறிச்சி மாவட்டம், புதுப்பட்டு, அரசு மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்டார்.

எனவே, பார்வை 2ல் காணும் அரசாணை மற்றும் பார்வை 3ல் காணும் பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைக் கடிதம் ஆகியவற்றில் தெரிவித்துள்ளவாறு எந்த வித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படாததால் பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியரான திரு.கே.ரவி என்பவரின் வாரிசுதாரர் திருமதி.ர.குணவதி என்பவர் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளராக நியமனம் பெறுவதற்கு தகுதிகள் பெற்றுள்ளதால் நியமன நாளான 04.08.2016 முற்பகல் முதல் அன்னாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் கீழ்க்கண்ட நிபந்தனைகள் அடிப்படையில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. பள்ளிக் கல்வித் துறையில், தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ் வரும் இளநிலை உதவியாளர் பணி நியமனமானது அரசளவில் பதிவு செய்யும் பொருட்டு, பள்ளிக் கல்வித் துறையால் எடுக்கப்படும் தொடர் நடவடிக்கைகளுக்கு உட்பட்டதாகும்.
2. தனியருக்கு மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு பணிக்காலம் தகுதிகாண் பருவமாக நிர்ணயம் செய்யப்படுகிறது.
3. தமிழ்நாடு அரசுஅளவில் பதிவு செய்யும் பொருட்டு நடைமுறையில் உள்ள சரிபார்ப்புப்

பணிவரன்முறை ஆணை பதிவு செய்யப்பட்ட பக்க நகல் ஆகியவற்றை சம்மந்தப்பட்ட அலுவலர் இவ்வலுவலகத்துக்கு உடன் அனுப்ப வேண்டும்.

4. பவானி சாகர் அடிப்படைப் பயிற்சி மற்றும் தகுதிகாண் பருவம் முடித்த பிறகே இரண்டாவது மற்றும் தொடர் ஆண்டு ஊதிய உயர்வுகள் வழங்கப்பட வேண்டும்.
5. தனியர் தனது பணிவரன்முறை தொடர்பான இந்நிகழ்வில், அரசின் விதித்தளர்வு / அரசாணைகள் தேவை என்ற நிலை எதிர்காலத்தில் எழுமாயின், இச்செயல்முறை ஆணையானது முன் அறிவிப்பு ஏதுமின்றி ரத்து செய்யத் தக்கதாகும்.
6. தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் (மாவட்ட அலுவலக நடைமுறை நூல்) தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும்.
7. பணிவரன்முறை செய்யப்பட்ட விவரம் சார்ந்து பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
8. இந்த ஆணை தனியர் சமர்ப்பித்துள்ள கல்விச்சான்றுகள் மற்றும் வருவாய்த் துறை சார்ந்த சான்றுகளின் உண்மைத் தன்மைக்கு உட்பட்டது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
கள்ளக்குறிச்சி.

பெறுநர்

1. திருமதி.ர.குணவதி,
இளநிலை உதவியாளர்,
(உரிய வழியாக)

நகல்:

1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர், அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. மாவட்டக்கல்வி அலுவலர், கள்ளக்குறிச்சி.
3. அலுவலக கோப்பிற்கு.